සියලු හිමිකම් ඇවිරිණි | முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved |

மேல்மாகாணக் கல்வித் திணைக்களம் - ஆரம்பப்பிரிவு

தரம் 05 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை

வினாத்தாள் 2026

முயற்சி செய்வோம் அச்சமின்றி முகம் கொடுப்போம்.

MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENT'S FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2026

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பாடசாலை : .....

7

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** அடைப்புக்குள் உள்ள **புள்ளிக்கோட்டிலும் 3வது பக்கத்திலுள்ள புள்ளிக்கோட்டிலும்** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	

இலக்கத்தில்	
எழுத்தில்	

முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	பெயர் ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	ஒப்பம்
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகள் சரியென உறுதிப்படுத்தகின்றேன்.	ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்யப்பட்டது	ஒப்பம்
வலய/மாகாண மேற்பார்வையாளர்	ஒப்பம்

LEARNEASY
KNOWLEDGE IS POWER

Learn Easy இன்

தனித்துவமான தரம் 5

zoom வகுப்புகள்



தமிழ்



A.வைஸ்னவி

சனி : 8.00pm - 9.00pm
ஞாயிறு : 8.00pm - 9.00pm

கணிதம்



L.கௌஷிகா

சனி : 7.00pm - 8.00pm
ஞாயிறு : 7.00pm - 8.00pm

சுற்றாடல்



D.தாரங்கனி

செவ்வாய் : 7.00pm - 8.00pm
வெள்ளி : 7.00pm - 8.00pm

English



M.தாரணி

வெள்ளி : 8.00pm - 9.00pm

சிங்களம்



K.தர்மினி

புதன் : 7.00pm - 8.00pm

நுண்ணறிவு-IQ



L.கௌஷிகா

செவ்வாய் : 8.00pm - 9.00pm
புதன் : 8.00pm - 9.00pm

வினாத்தாள்

பகுதி 1 L.கௌஷிகா — வியாழன் : 8.00pm - 9.00pm

பகுதி 2 D.தாரங்கனி — திங்கள் : 8.00pm - 9.00pm



- ஒவ்வொரு மாணவரின் மீதும் தனிக்கவனம் செலுத்தப்படும்.
- Recording மற்றும் வினாத்தாள் pdf வழங்கப்படும்.
- அனைத்து பாடங்களும் சேர்த்து மாதம் 2,500/-
- விரும்பிய பாடங்களை மட்டும் தெரிவு செய்து படிக்கும் வசதியும் உண்டு.

அனுமதிக் கட்டணம்
1,000/-

zoom ONLINE CLASSES

அழையுங்கள் : 0766674945

1. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.



(1)




(2)



(3)

2. கட்டத்திலுள்ள தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப்பொருத்தமானது எது?





1.



2.



3.

3. பின்வரும் விபரணத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

- கண்ணால் பார்க்க முடியாது.
- காதால் கேட்க முடியும்.
- சிறியதாக இருந்தால் எங்கும் கொண்டு செல்ல முடியும்.



1.



2.



3.

4. சந்தை வியாபாரி ஒருவர் தன்னிடம் இருந்த 7kg , 5kg , 3kg நிறை கொண்ட மூன்று படித்தராசுகளை மாத்திரம் வைத்துள்ளார். அவர் ஒரே தடவையில் 9kg அரிசியை அளக்க வேண்டியுள்ளது. வியாபாரி இச்செயற்பாட்டினை

1. அளக்க முடியும்
2. மேலும் படிகள் தேவை
3. அளக்க முடியாது

5. பின்வரும் வாக்கியத்தில் உள்ள இரு வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற்சோடி யாது?

வனங்கள் எங்களின் பாதுகாப்பு கவசங்கள் ஆகும். அவற்றை ..... பாதுகாத்து ..... சமநிலையைப் பேணுவோம்.


1. கவனமாக, எங்களின்
2. அன்போடு, இயற்கையின்
3. அழியவிடாது, சூழல்

www.lkedu.lk

6. ஜோன் 25 வினாக்களைக் கொண்ட பரீட்சையில் கலந்து கொள்கிறான். சரியாகப் பதிலளிக்கும் ஒரு வினாவிற்கு 4 புள்ளி வழங்கப்படும். பிழையாகப் பதிலளிக்கும் ஒரு வினாவிற்கு பெற்ற புள்ளியிலிருந்து 2 புள்ளி குறைக்கப்படும் எனின், 64 புள்ளிகளைப் பெற்ற ஜோன் எத்தனை வினாக்களுக்குச் சரியாகப் பதிலளித்திருப்பான்?

1. 20 2. 19 3. 6

7. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணை தெரிவு செய்க.



1. 41
2. 60
3. 55

8. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் ஒரு சம்பவம் உருவாகும். அவ் ஒழுங்கு முறையில் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

A - அது ஓர் அடர்ந்த காடு.

B - "உணவு ஏதும் கிடைக்காதா?"என்று யோசித்தது.


C - அப்பொழுது மான் குட்டி ஒன்று அருகே சென்றது.

D - பசியால் மிகவும் சோர்வுற்றது.

E - சிங்கம் ஒன்று பசியோடு அங்குமிங்கும் அலைந்து திரிந்தது.

1. AECDB 2. AEDBC 3. AEDCB

9. இந்நெய்யரியில் ஒரு சிறிய சதுரத்தின் ஒருபக்க நீளம் 2cm எனக் கொண்டு 64 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவையுடைய சதுரம் ஒன்றை வரைந்தால் அச்சதுரத்தின் சுற்றளவு யாது?



1. 32cm 2. 8cm 3. 16cm


10. கீழே தரப்பட்ட வாக்கியங்களில் எழுத்துப் பிழை உள்ள வாக்கியத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1. மரத்திலிருந்து காய்ந்த இலைகள் உதிர்ந்தன.
2. காலையில் தொழிலாளர்கள் நேரத்துடன் வேலைக்குச் சென்றனர்.
3. மாணவர்கள் விடாமுயச்சி செய்து பரீட்சையில் சித்தியடைந்தார்கள்.

11. ஒரு மகிழுந்தில் நால்வர் பயணம் செய்தனர். ஓட்டுநர் அருகில் இருப்பவரின் மகன் அல்ல. அருகில் இருப்பவருக்கு 3 பிள்ளைகளாகும். எனின், ஓட்டுநர் அருகில் இருப்பவருக்கு என்ன உறவு?

1.அம்மா 2. மகள் 3. மகன்

www.ikkedu.lk


12. 

இச் சதுரமுகியை புள்ளிக்கோடுகள் வழியே வெட்டி அகற்றிய பின் எஞ்சிய பகுதியிலுள்ள விளிம்புகள் எத்தனை?


1. 15 2. 14 3. 16


13. சமபக்க முக்கோண வடிவம் கொண்ட வயல் காணியொன்றின் ஒரு பக்க நீளம் 12 மீற்றர் ஆகும். அதனை சுற்றிவர 4 மீற்றர் இடைவெளியில் வேலித் தூண்கள் நடப்பட்டுள்ளன. அவ்வாறு நடப்பட்ட தூண்களின் மொத்த எண்ணிக்கை யாது?


1. 10 2. 36 3. 9

14. 

உரு A யின் மீது உரு B யை வைக்கும் போது கிடைக்கும் உரு எது?


1.


2.


3.


15. ராஜாவிடம் சில பந்துகள் உள்ளன. அவற்றில் இரண்டைத் தவிர ஏனையவை பச்சை நிறப் பந்துகளாகும். இரண்டைத் தவிர ஏனையவை சிவப்பு நிறப் பந்துகளாகும். இரண்டைத் தவிர ஏனையவை நீல நிறப் பந்துகளாகும். எனின் ராஜாவிடம் உள்ள நிறப்பந்துகளின் எண்ணிக்கை யாது?

1. 3 2. 6 3. 9


16. 346 இன் அரைவாசியுடன் 37 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

1. 173 2. 210 3. 110


17. சுமித் A என்ற இடத்திலிருந்து கிழக்கு நோக்கி 100m தூரம் சென்று பின் தெற்கு நோக்கி 50m தூரம் சென்று பின், மீண்டும் கிழக்கு நோக்கி 100m தூரம் சென்று B என்ற இடத்தை அடைந்தான். எனின் அவன் சென்ற பயணப் பாதையைக் காட்டும் உரு எது?



1.



2.



3.

18. "மாலினி ஒவ்வொரு நாளும், அம்மாவும் அப்பாவும் கொடுக்கும் சிறுதொகை காசை உண்டியலில் சேர்த்தாள். ஒரு நாள் கற்றல் தேவைக்காக ரூபாய் 1000.00 ஐ எடுப்பதற்காக உண்டியலை உடைத்தாள். அதில் ரூபாய் 8650.00 பணம் இருந்தது." எனும் கூற்றுக்குப் பொருத்தமான பழமொழி எது?

1.முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

2.சிறு துளி பெரு வெள்ளம்.


3.கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

www.ikeda.lk

19. 31 நாட்களைக் கொண்ட மாதம் ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய ஐந்து நாட்கள் வீதம் உள்ளன. அவ்வாறு எனின் குறித்த மாதத்தில் 21 ஆம் திகதி என்ன நாளாகும்?

1. ஞாயிற்றுக்கிழமை 2. வெள்ளிக்கிழமை 3. சனிக்கிழமை

20. சில கட்டங்களிலான உருவொன்று கீழே தரப்பட்டுள்ளது. இப்படத்துடன் தொடர்புள்ள கருத்தினை தெரிவு செய்க.



1. பறவை , கிளி , விலங்குகள் , யானை
2. நிறங்கள், வெள்ளை , கறுப்பு , சிவப்பு
3. பிராணிகள் , ஊர்வன , மைனா , பாம்பு

21. நாளை மறுதினம் 19ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். நேற்று முன்தினத்திற்கு முதல்நாள் என்ன கிழமை?

1. சனிக்கிழமை 2.ஞாயிற்றுக்கிழமை 3. வியாழக்கிழமை

வினா இலக்கம் 22 , 23 ஆகிய வினாக்களுக்கு நிரல் நிரையை அவதானித்து சரியான விடையின் கீழ் கோடிடுக.

	நிரல் - 01	நிரல் - 02	நிரல் - 03
நிரை - 01	5	8	3
நிரை - 02	1	4	7
நிரை - 03	9	0	2

அறிவுறுத்தல் -1 :- நிரல் - 03 ஐ நிரல் - 01 இற்கும் நிரல் - 01 ஐ நிரல் - 03 இற்கும் மாற்றுக

அறிவுறுத்தல் -2 :- நிரை - 01 ஐ நிரை - 02 இற்கும் நிரை - 02 ஐ நிரல் - 03 இற்கும் நிரை - 03 ஐ நிரல் - 01 இற்கும் மாற்றுக

22. மாற்றத்தின் பின்னர் நடுவில் வரும் இலக்கம்

1. 0 2. 4 3. 8

23. மாற்றத்தின் பின்னர் 3 வது நிரலிலும் 2 வது நிரையிலும் உள்ள இலக்கம்

1. 1 2. 9 3. 5

24. A எனும் நபர் 2m சுற்றளவுடைய சக்கரம் பொருத்திய சைக்கிளில் பயணம் செய்தார். சைக்கிளின் பெரிய பற்சில்லு ஒரு முறை சுழலும் போது சிறிய பற்சில்லு 4 முறை சுழலும்.பெரிய பற்சில்லு 6 முறை சுழன்றது. எனின் A எனும் நபர் பயணம் செய்த தூரம் யாது?

1. 48m 2. 24m 3. 12m

25. பாடசாலை ஒன்றில் 45 நிமிடங்களுக்கு ஒரு தடவை பாட நிறைவுக்கான மணி ஒலிக்கப்படும். குறித்த ஒரு நாளில் மு.ப 10.15 மணிக்கு நான்காவது தடவையாக மணி ஒலிக்கப்பட்டது. அவ்வாறாயின் முதலாவது மணி ஒலித்த நேரம் யாது?

1. பி.ப 8.00 2. மு.ப 7.15 3. மு.ப 8.00


www.tamiledu.lk


26. 

அருகிலுள்ள கடிகாரத்தை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் விம்பத்திலும் 18 நிமிடங்கள் முந்திய நேரம் யாது?

1. 7.00 2. 6.42 3. 7.18

விலைத் தரவுகளை அவதானித்து 27 , 28 ஆகிய வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.





27. புத்தகம் ஒன்றின் விலை யாது?

1. ரூபாய் 140.00 2. ரூபாய் 30.00 3. ரூபாய் 45.00


28. அழிறப்பர் மூன்றின் விலை யாது?


1. ரூபாய் 90.00 2. ரூபாய் 125.00 3. ரூபாய் 135.00


29. பாத்திமா கடைக்குச் சென்று ரூபாய் 520.00 பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்து ரூபாய் 1000.00 காசுத்தாள் ஒன்றை கடைக்காரருக்குக் கொடுத்தாள். கடைக்காரர் பாத்திமாக்கு ரூபாய் 500.00 ஐ மீதிப் பணமாக வழங்கினார். அதன் படி பாத்திமாவிடம் மீண்டும் மேலதிகமாக வாங்கிய பணம் எவ்வளவு?


1. ரூபாய் 480.00 2. ரூபாய் 20.00 3. ரூபாய் 10.00


30. கீழே தரப்பட்டுள்ள A எனும் சதுர வடிவத் தாளானது புள்ளிக் கோட்டின் வழியே மடிக்கப்பட்டு உரு B , C என்பன பெறப்பட்டுள்ளன. பின்னர் உரு C இல் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளிக்கோட்டின் வழியே ஒரு பகுதி வெட்டி நீக்கப்பட்டது. பின்னர் அத்தாளை விரிக்கும் போது தோன்றும் சரியான உரு



உரு A


உரு B


உரு C


1.


2.


3.

www.lkedu.lk

31. மூன்று நண்பர்கள் வெளிநாட்டில் தங்கியிருந்த விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- ஆத்விக் - 2 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை
- அன்வர் - 5 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை
- ரேகான் - 3 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை

இதனடிப்படையில் வெளிநாட்டில் மூவரும் ஒன்றாகத் தங்கியிருந்த நாட்கள் எத்தனை?

1. 6 2. 14 3. 5

32. ஒரு கேக் 48 சமதுண்டுகளாகப் பிரிக்கப்பட்டது. சமீர் கேக்கின் $^2/_4$ பகுதியையும் அமீர் $^1/_6$ பகுதியையும் உண்டனர். எனின் மிகுதியாக எத்தனை கேக் துண்டுகள் எஞ்சியிருக்கும்?


1. 16 2. 32 3. 24

33. பொருளொன்றின் விலை ரூபாய் 53539.00 ஆகும். அப்பொருளின் விலையைக் குறிக்கும் சரியான இரகசியக் குறியீட்டினை தெரிவு செய்க.

1. ✚D✚D♡.✚✖ 2. ✚D✚D♡.✖✚ 3. ✚D✚D♡.✖✖

34. A , B ஆகிய இரு பாத்திரங்களும் நீரினால் நிரப்பப்பட்டுள்ளன. A யில் இருந்து அரைவாசி நீரை B இற்கு B யில் இருந்து அரைவாசி நீரை A இற்கு என மாறி மாறி ஊற்றிய பின்னர்

1. A பாத்திரத்தில் அதிக நீர் இருக்கும்.
2. இரு பாத்திரங்களிலும் சம அளவு நீர் இருக்கும்.
3. B பாத்திரத்தில் அதிக நீர் இருக்கும்.



A B

35. சில மாணவர்களின் பிறந்த தினங்கள் வருமாறு

மாதங்கி : 2012-11-24

சங்கவி : 2016-01-01

அனுலா : 2012-11-25

காமினி : 2016-09-18

இவர்களில் வயது கூடியவர் யார்?

1. காமினி 2. அனுலா 3. மாதங்கி

36. ஒரு முச்சக்கர வாகனமானது 1 லீற்றர் எரிபொருளில் 60km தூரம் பயணிக்கும். அவ் முச்சக்கர வாகன எரிபொருள் தொட்டியின் கொள்ளளவு 13 லீற்றர் ஆகும். தொட்டியை முழுவதுமாக நிரப்பிக்கொண்டு பயணத்தை ஆரம்பித்தது. பயண முடிவில் 2லீற்றர் 500 மில்லிலீற்றர் எரிபொருள் மீதியாக இருந்தது எனின் அவ் முச்சக்கர வாகனம் பயணம் செய்த தூரம் யாது?

1. 600km 2. 630km 3. 660km

www.ikeedu.lk

37. ஓர் ஆசிரியரிடம் அவரது வயதைக் கேட்டால் பின்வருமாறு கூறினார்.“எனது வயதிலுள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 ஆகும். அந்த இரு எண்களையும் இடம் மாற்றி வைத்தால் அது எனது தந்தையின் வயதாகும்” தந்தையின் வயது 63 எனின், ஆசிரியரின் வயது யாது?

1. 45 2. 54 3. 36

38. பின்வரும் பாடலின் பிரதானமான கருத்து யாது?

“என்னால் இது செய்ய முடியாது ” - எனும்
எதிர்மறைப் பேச்சை விட்டு விடு!
“என்னால் எது செய்ய முடியாது?” - எனும்
ஏத்த கேள்வி கேட்டு விடு!.


1. முயற்சி செய்யாமல் வெற்றி பெற வேண்டும்.
2. யாரிடமும் உதவி கேட்டு வெற்றி பெற வேண்டும்.
3. தன்னம்பிக்கையே எமது முதல் தைரியம் ஆகும்.

39. சுதன் ஏணியில் ஏறி விளையாடிக்கொண்டிருந்தான். அவன் நான்கு படி ஏறியதும் இரண்டு படி கீழே இறங்குவான். ஏணியில் மொத்தம் 12 படிகள் உள்ளன. சுதன் உச்சிக்கு சென்றடைந்து விட்டான். அவன் மொத்தமாக எத்தனை படிகள் இறங்கியிருப்பான்?

1. 8 படிகள் 2. 10 படிகள் 3. 6 படிகள்

40. சிறிய சதுரமுகிகளினால் அமைக்கப்பட்ட இவ்வுருவானது. உருவிலுள்ளவாறு நிறம் பூசப்பட்டுள்ளது. அதன் பின் தனித்தனியாக சிறிய சதுரமுகிகளாக பிரிக்கப்பட்டது. எனின் நான்கு பக்கமும் நிறம் பூசப்படாத சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை எத்தனை?

1. 8 2. 6 3. 7



www.lk

සියලු හිමිකම් ඇවිරිණි | முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved |

மேல்மாகாணக் கல்வித் திணைக்களம் - ஆரம்பப்பிரிவு

தரம் 05 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை

வினாத்தாள் 2026

முயற்சி செய்வோம் அச்சமின்றி முகம் கொடுப்போம்.

MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENT'S FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2026

வினாத்தாள் - II

ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் : .....

பாடசாலை : .....

7

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் உள்ள குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	

இலக்கத்தில்	
எழுத்தில்	

முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	பெயர் ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	ஒப்பம்
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகள் சரியென உறுதிப்படுத்தகின்றேன்.	ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்யப்பட்டது	ஒப்பம்
வலய/மாகாண மேற்பார்வையாளர்	ஒப்பம்

LEARN EASY
KNOWLEDGE IS POWER

Learn Easy

Online School

ONLINE (ZOOM) CLASS



“ உங்கள் பிள்ளைகளின் கல்வியில்
அக்கறையுள்ள, நம்பிக்கையான,
இலங்கையின் முண்ணணி
தரமான **online (ZOOM)**
கல்வி நிறுவனம்
Learn Easy
மட்டுமே ! ”

- தரமான கற்பித்தல்
- ZOOM வகுப்புகள்
- பதிவு வீடியோக்கள்
- வினாத்தாள் PDF
- தனிப்பட்ட கவனம்

தரம் 1
தொடக்கம்
A/L
வரை
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

அழையுங்கள் : **076674945**

பகுதி - II

1. தரப்பட்ட பகுதியினை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

தொல்பொருள்கள் எமது தேசிய சொத்துக்களாகும். இவை ஓர் இனத்தின் அடையாளமும் ஆகும். எமது பண்டைய காலச் சிறப்புக்களை எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் விதமாக இவற்றைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். இவை மழை, வெயில், இயற்கை அனர்த்தம் போன்ற காரணிகளால் அழிவடைகின்றன. மனித செயற்பாடுகளான உடைத்தல், கிறுக்குதல், திருடுதல் போன்ற செயற்பாடுகளினாலும் பாதிப்படைகின்றன. இவை தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தாலும், பாதுகாப்புப்படையாலும் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் இவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு அவ்விடங்களில் விதிமுறைகளைக் கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. சிற்பங்களைத் தொட வேண்டாம்."என்ற அறிவுறுத்தலும் எழுதப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். இவ்விதிகளை கடைப்பிடிக்கத் தவறும் போது நாம் தண்டனைக்கு உள்ளாக நேரிடும். எனவே இவற்றைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.

i. ஓர் இனத்தின் அடையாளமாகக் கருதப்படுவது யாது?

.....

ii. தொல்பொருட்களை பாதிப்படையச் செய்யும் மனிதச் செயற்பாடுகள் இரண்டை எழுதுக

.....

iii. பண்டைய காலச் சிறப்புக்களை அறிந்து கொள்ளவேண்டியவர்கள் யார்?

.....

iv. இனங்களின் என்பதன் ஒருமைச் சொல் யாது?

.....

v. குறி என்பதன் ஒத்த சொல் யாது?

.....

vi. தொல்பொருள்களை பாதுகாப்பதில் ஈடுபடும் அரச நிறுவனம் எது?

.....

vii. அ.்.றிணை பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக

.....

2. சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. தூக்கணாங்குருவி ஒரு தலை சிறந்த
(பொறியியலாளர் , பொறியியலாழர் , பொறியியலாலர்)

www.lkedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது I All Rights Reserved I

2. சிங்கத்தின் ஒலியைக் கேட்ட மான்கள் ஓடி
(ஒலிந்தன , ஒழிந்தன , ஒளிந்தன)

3. மான் காட்டில் (கூட்டமாகத், கூட்டங்களாகத்) திரிந்தது.

3. ஒழுங்குபடுத்தி எழுதுக.

அவர்கள் / சாதனையை / செய்யும் / உயிரினத்தாலும் / முடியாது / செய்ய / அந்நாட்களில் / எந்தவொரு

.....

4. பொருத்தமான நிறுத்தற் குறியை இடுக

சில நாட்கள் கழித்து இராமபிரான் பயணத்தைத் தொடர்ந்த போது வழியில் யமுனா நதியைக் கண்டார்

5. பிரித்தெழுதுக.

1. வெந்நீர் :-.....
2. தேனீர் :-.....

6. கருத்திற்கேற்ப பழமொழியை எழுதுக.

1. உடல் வலிமை அவசியம் :- .....

7. எழுத்து வழக்கில் எழுதுக.

- அஞ்சு குஞ்சு :- .....

8. உவமைத் தொடரின் கருத்தை எழுதுக.

1. தாமரை இலையின் நீர் போல :- .....

9. பொருத்தமான விடையை இடைவெளியில் எழுதுக.

1. மாட்டின் மலம் சாணம் என்பது போல ஆட்டின் மலம் :-.....
2. தென்னையின் பிஞ்சு குரும்பை போல பலாவின் பிஞ்சு :-.....
3. ஆடு மந்தை என்பது போல தென்னை :-.....

10. தொடர்மொழிக்குரிய ஒரு மொழியை எழுதுக.

1. கலை நிகழ்சிகளை மேடையேற்ற முன் சரி பிழை பார்த்து திருத்தும் நிகழ்வு

.....

2. ஒன்றைப் போல் பிரதியெடுத்தல்

.....

11. பொருத்தமற்ற சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

1. (வீடு / வீடுகள்) இருந்தன.
2. (பல் / பற்கள்) விழுந்தது.

www.ikedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது I All Rights Reserved I

12. தரப்பட்ட படங்களுக்குரிய ஆங்கில சொற்களை எழுதுக.

1. 

2. 

13. ஆங்கிலச் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

1. How much is it? : - .....
2. I am reading a book? :- .....

14. சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

1. வகுப்பறை :- .....
2. சிற்றுண்டிச்சாலை :- .....

15. சிங்கள கருத்தை தமிழில் எழுதுக.

1. குருவரயா கொஹேத? : - .....
2. ஒப கவுத? :- .....

16. 40,999 இற்கு அடுத்து வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

.....

17. 400 இனிப்புக்களில் 80 இனிப்புக்களை மீதப்படுத்திவிட்டு மீதி இனிப்புக்களை ஒரு பைக்கற்றில் 06 இனிப்புக்கள் வீதம் இட்டு பொதி செய்தால் பொதி செய்யப்பட்ட பைக்கற்றுக்களின் எண்ணிக்கை யாது?

.....

18. ரூபாய் 78.00 விலையுள்ள பயிற்சிப் புத்தகத்தையும் ரூபாய் 92.00 விலையுள்ள கதைப் புத்தகத்தையும் வாங்குவதற்கு என்னிடம் ரூபாய் 150.00 உள்ளது. மேலும் தேவைப்படும் பணம் எவ்வளவு?

.....

19. 29,999 இற்கு அடுத்து வரும் இரு இரட்டை எண்களின் கூட்டுத்தொகையின் அரைவாசியை விரித்தெழுதுக.

.....

20. காலை 6.00 மணிக்கு புறப்பட இருந்த பேருந்து 25 நிமிடங்கள் தாமதித்து பயணத்தை ஆரம்பித்தது. பேருந்து 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் பயணித்தது எனின் பயணத்தைப் பூர்த்தி செய்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....

முழுப் பதிப்புரிமையுடையது I All Rights Reserved I

21. 1kg திராட்சைப் பழத்தின் விலை ரூபாய்.160.00 ஆகும். 2kg 250g திராட்சைப் பழத்தின் விலை யாது?

.....

22. 836 புத்தகங்களை 4 இறாக்கைகளில் சமமாக அடுக்கினால் ஒரு இறாக்கையில் காணப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

.....

23. ஒரு பாத்திரத்தை நிரப்புவதற்கு 6ℓ 540mℓ அளவுள்ள நீர் தேவைப்படுகிறது. அத்தகைய 4 பாத்திரங்களை நிரப்பத் தேவையான நீரின் கனவளவு யாது?

.....

24. 2kg மாவின் விலையானது 500g மிளகின் விலையாகும். சுனில் 1500g மிளகு வாங்கிய பின் ரூ.5000 கொடுத்த போது ரூ.4100.00 மீதியாகக் கிடைத்தது. எனின் 1kg 500g மாவும், 250g மிளகும் வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

.....

25. ஓர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் போட்டியாளர் ஓடவேண்டிய தூரம் 50km 500m ஆகும். ஓடுபவர் 15km 210m தூரம் ஓடி முடித்துள்ளார். அவர் இன்னும் ஓடி முடிக்க வேண்டிய தூரம் யாது?

.....

26. 8l 500ml நிறப்பூச்சினை 5 பாத்திரங்களில் சமமாக இட்டால் இரு பாத்திரங்களில் அடங்கும் நிறப் பூச்சின் அளவு யாது?

.....

27. ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட ஒன்பது நிறங்களில் 819 பந்துகள் உள்ளன. ஒவ்வொரு நிறத்திலும் சம எண்ணிக்கையில் பந்துகள் உள்ளன. ஒரு நிறத்திலுள்ள பந்துக்களின் எண்ணிக்கை யாது?

.....

28. 

இத்திண்ம உருவை கிடையாக வெட்டும் போது கிடைக்கும் தள வடிவத்தின் பெயர் என்ன ?

.....

முழுப் பதிப்புரிமையுடையது I All Rights Reserved I

29. ஒரு மாணவன் வடக்கு நோக்கி நிற்கும் போது அவனது வலக்கைப் பக்கமாக ஒரு மாமரமும் அவனுக்கு நேரே பின் பக்கமாக ஒரு தென்னைமரமும் நின்றது. மாமரம் உள்ள திசைக்கும் தென்னைமரம் உள்ள திசைக்கும் இடையில் சரி நடுவில் உள்ள திசை யாது?

.....

30. 2/5 பங்கை தசமத்தில் தருக.

.....

.....

• 31 – 60 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

31. பப்பாசி, ஆமணக்கு ஆகிய இலைகளின் வடிவங்களிற்கு ஒத்த இலைகளாக அமைவன
    1. ஆமணக்கு, அரசு
    2. வெண்டி, ஈரப்பலா
    3. மரவள்ளி, வெற்றிலை

32. வெட்டும் திறன், துளையிடும் திறன், கூடு கட்டும் திறன் ஆகிய ஆற்றல்களைக் கொண்ட பறவைகள் முறையே
    1. கிளி, வெட்டுக்கிளி, சிலந்தி
    2. குருவி, தேன்குருவி, கறையான்
    3. கிளி, மரங்கொத்தி, தச்சன்குருவி

33. கவர்ச்சுத்தியல், சம்மட்டி ஆகிய இரண்டினதும் பயன்களாக அமைவன முறையே
    1. ஆணி அறைதல், கல் உடைத்தல்
    2. ஆணி பிடுங்குதல், கம்பிகளை வெட்டுதல்
    3. திருகாணி கழற்றுதல், பூட்டுதல்


34. சங்கமித்தா ஊர்வலம், பாஸ்கு வருடாந்த விழா ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடும் மதத்தவர்கள் முறையே
    1. சிங்களவர், கிறிஸ்தவர்
    2. பௌத்தர், கிறிஸ்தவர்கள்
    3. இஸ்லாமியர், பறங்கியர்

35. விளை பொருள்கள் வீண்விரயமாவதற்கு காரணமாக அமையாதது
    1. கடும் மழை
    2. வரட்சி
    3. உரிய காலத்தில் அறுவடை

36. நீரிலுள்ள பாசி வகைகளை அவதானிப்பதற்கு பயன்படும் உபகரணம்
    1. தொலைநோக்கி
    2. மூக்குக்கண்ணாடி
    3. கைவில்லை

37. வகுப்பறையில் பயன்படுத்தும் பொது வளங்கள்
    1. நீர்க்குழாய், தொலைபேசி
    2. ஆசிரியர் மேசை, ஆசிரியர் கதிரை
    3. சிற்றுண்டிச்சாலை உபகரணம், மைதானம்

முழுப் பதிப்புரிமையுடையது I All Rights Reserved I

38. 

போத்தலில் இடப்பட்ட வித்து முளைக்கவில்லை. இதற்கான காரணமாக அமைவது

1.வெப்பம் கிடைக்காமை
2. நீர் கிடைக்காமை
3. போதியளவு வளி கிடைக்காமை

39. நீண்ட நாக்கைப் பயன்படுத்தி இரையைப் பிடிப்பன
1. பச்சோந்தி, பாம்பு, நத்தை
2. தவளை, பாம்பு, பல்லி
3. அணில், ஓணான், பாம்பு

40. வறிய குடும்பங்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல், ஆங்கிலப் பாடத்தைக் கட்டாயமாக்கல், தாய்மொழியினை ஊடக மொழியாக்குதல் போன்ற சேவையினை ஆற்றியவர்
1. C.W.W.கன்னங்கரா 2. ரீ.பி.ஜாயா 3. கேணல் ஒல்கொட

41. உடலில் நஞ்சேறல், அதிக நோவு, உயிரிழப்பு ஆகிய பாதிப்புக்களை ஏற்படுத்தும் விபத்துக்களில் ஒன்று
1. காலில் பாம்பு தீண்டுதல்
2. படிக்கட்டில் இருந்து விழுதல்
3. வெந்நீரால் சுடுகாயம் ஏற்படல்

42. தாவரங்களுக்கு பொறிமுறை ஆதாரம் வழங்குவது
1. வேர் 2. கிளை 3. தண்டு

43. புராதன காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் ஆற்றிய மிகப்பெரிய பணி
1. யுத்தம் புரிந்தமை
2. கோயில், விகாரைகள் கட்டியமை
3. குளங்களைக் கட்டியமை

44. லொறி ஒன்றினுள் பொருட்களை ஏற்றுவதற்கு உதவும் உபகரணம்
1. மின் உயர்த்தி 2. சாய்தளப் பலகை 3. கப்பி

45. "பச்ச வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ பயிரறுக்கப் போற பெண்ணே ஏலேலோ..... மயில் ஏலேலோ....." இது எவ்வகைப் பாடல்
1. மீன்பிடிப்பாடல் 2. அரிவிவெட்டுப்பாடல் 3. வண்டி ஓடும் பாடல்

46. மேசைக் கரண்டியில் சிறிதளவு உப்புக் கரைசலை இட்டு மெழுகுவர்த்திச் சுவாலையில் பிடிக்கும் போது
1. கரண்டி வெப்பமாகாது.
2. நீர் மட்டும் ஆவியாகும்.
3. உப்புக் கரைசல் ஆவியாகும்.

47. நாய், பூனை, நரி, குரங்கு என்பனவற்றால் ஏற்படும் நோய்
1. ஆனைக்கால் 2. விசர்நாய்க்கடி 3. கொள்ளை

48. இலங்கைக்கே உரித்தான பறவையினம் அல்லாதது
1. நாகணவாய் 2. மயில் 3. புளுணி

www.ikuedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது I All Rights Reserved I

49. தேசப்படமொன்றில் பெருஞ்சாலைகளைக் குறித்துக்காட்ட பயன்படும் நிறம்
1. சிவப்பு 2. மஞ்சள் 3. நீலம்

50. பாரமான பொருட்களை இலகுவாக இழுத்துச் செல்ல உதவும் பொருள்
1. பற்சில்லு 2. கஸ்பர்வீல் 3. சில்லும், அச்சாணியும்

51. நதிகள் கடலுடன் கலக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
1. கழிமுகம் 2. மேட்டுநிலம் 3. உப்போடை

52. மழைமானி ஒன்றில் காணப்படும் அலகு
1. மில்லிலீற்றர 2. மில்லிகிராம் 3. மில்லிமீற்றர்

53. வலைப்பந்துக் குழு ஒன்றில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை
1. 11 2. 14 3. 7

54. தரமான தேயிலைத் தூளை சாதாரண நீரில் இடும் போது தோன்றும் நிறம்
1. சிவப்பு 2. இளமஞ்சள் 3. கபிலம்

55. மாணவரொருவர் நாளொன்றுக்கு அருந்த வேண்டிய நீரின் அளவு
1. 900mℓ – 1000mℓ 2. $1\frac{1}{2}\ell$ – 2ℓ 3. 5ℓ – 6ℓ

56. சட்டக் காந்தம் ஒன்றின் வட முனைவு காட்டி நிற்கும் நிறம்
1. நீலம் 2. கறுப்பு 3. சிவப்பு

57. விவசாய தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் அல்லாதது
1. நுகத்தடி, வேலைக்காரன் கம்பு
2. துருத்தி, குல்லம்
3. குல்லம், வேலைக்காரன் கம்பு

58. முதன்மை வர்ணங்களுள் அடங்காதது
1. சிவப்பு 2. மஞ்சள் 3. பச்சை

59. எமது உடலில் இருந்து நீர் இழப்பு ஏற்படும் சந்தர்ப்பம்
1. வாந்திபேதி 2. வயிற்றுவலி 3. தலையிடி

60. பயிர்ச்செய்கைக்கு தீங்கு விளைவிக்கும் பிராணிகள்
1. மண்புழு, ஆந்தை 2. தேனீ, குளவி 3. நத்தை, தத்துவெட்டி

61. "பாடசாலையில் நான் பங்குபற்றிய கல்விக் கண்காட்சி" என்ற தலைப்பில் 5 சொற்களுக்குக் குறையாமல் 3 வாக்கியங்கள் எழுதுக.

i. .....

.....

ii. .....

.....

iii. .....

.....

***